# ஊட்டியில் நவீனமயமாக்கப்பட்ட ஆவின் பாலகம்: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு திறந்து வைத்தார்



ஊட்டி, அக்.16-
நீலகிரி மாவட்டம், ஊட்டி சேரிங்கிராஸ் கமர்சியல் சாலை பகுதியில் கூட்டுறவு சுயசேவை பிரிவு அருகில் நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்;றியத்தின் சார்பில் 24 மணி நேரமும் செயல்படும் வகையில நவீன மயமாக்கப்பட்ட ஆவின் பாலகத்தினை, மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேற்று (15.10.2025) குத்துவிளக்கேற்றி திறந்து வைத்து பார்வையிட்டு, ஆவின் பொருட்களின் முதல் விற்பனையை தொடங்கி வைத்தார்.

இந் நி கழ்ச் சி யில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

நீலகிரி மாவட்டம் சேரிங்கிராஸ் கமர்சியல் சாலை பகுதியில் நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்;றியத்தால் நடத்தப்பட்டு வந்த ஆவின் பாலகம் தற்போது நவீ ன ம ய மாக் கப் பட்டு, முழு நேரம்(24 மணி) செயல்படும் முறையில் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் பயன்பெறும் வகையில் இன்றைய தினம் திறந்து வைக் கப் பட் டுள் ளது. மேலும் இப்பாலகத்தில் ஆவின் தயாரிப்புகளான பால் பாக்கெட், சுடு பால், பாதாம் பால், தயிர், பால்கோவா, நெய், வெண்ணெய், பன்னீர், ஐஸ்கிரீம், இனிப்பு மற்றும் கார வகைகள் உள்ளிட்ட அனைத்து உபபொருட்கள் மற்றும் இண்ட்;கோசர்வின் தயாரிப்புகளும்(தேயிலை) கிடைக்கும்; வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், தீபாவளி பண்;டிகையை முன்னிட்டு ஆவின் தயாரிப்புகளான காஜிகட்லி, அல்வா, மைசூர்பாக்கு, கேரட் அல்வா, மிக்சர், முறுக்கு உள்ளிட்ட இனிப்பு மற்றும் கார வகைகள் விற்பனைக்;காக வைக் கப் பட் டுள் ளது. எனவே பொதுமக்கள் இதனை வாங்கி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

இந் நி கழ்ச் சி யில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா, ஆவின் பொது மேலாளர் ராஜேஷ்குமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் மரு. சித்ரா, வருவாய் கோட்டாட்சியர் டினு அரவிந்த், விற்பனை மேலாளர் (இண்ட்கோ சர்வ்) மகேந்திரன், துணைப்பதிவாளர்(பால் வளம்) செந்தில்குமார், மேலாளர்கள் கார்த்திக் (விற்பனை பிரிவு), நந்தகோபால் (கணக்கு), திருமுருகன் (பொறியியல்), மரு.செல்வகணபதி (பால் உற்பத்தி), கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் சி.அய்யனார், வட்டாட்சியர் சங்கர்கணேஷ் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சித்தோடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் கலெக்டர் ச.கந்தசாமி ஆய்வு



ஈரோடு.அக்.16-
ஈரோடு மாவட்டம் சித்தோடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் கலெக்டர் ச.கந்தசாமி ஆய்வு மேற்கொண்டனர்.

ஈரோடு ஆவின் நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி பண்டிகை முன்னிட்டு தூய பசும்பாலில் இருந்து எடுக்கப்பட்ட வெண்ணை நெய் மற்றும் தரமான மூலப்பொருட்களை கொண்டு சுவை மிகுந்த இனிப்பு பொருட்களை தயாரித்து வாடிக்கையாளர்களுக்கு நியாயமான விலையில் விற்பனை செய்து வருகிறது. அதனடிப்படையில் எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஈரோடு ஒன்றியத்திற்கு 20 மெ.டன் ஆவின் இனிப்பு மற்றும் கார வகைகள் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தீபாவளி பண்டிகைக்கென ஆவின் பால்கோவா 25 கிராம் ரூ.15 விலையிலும், 100 கிராம் ரூ.50 விலையிலும், 200 கிராம் ரூ.100 விலையிலும், 500 கிராம் ரூ.250 விலையிலும், சர்க்கரை இல்லாத கோவா ரூ.300 விலையிலும், பேரிட்சை கோவா 250 கிராம் ரூ.140 விலையிலும், குளோப் ஜாமூன் மிக்ஸ் 175 கிராம் ரூ. 130 விலையிலும், பாதாம் மிக்ஸ் 200 கிராம் ரூ.120 விலையிலும் சிறப்பு மைசூர்பா 250 கிராம் ரூ.140 விலையிலும் சிறப்பு மைசூர்பா 500 கிராம் ரூ.270 விலையிலும் விற்பனைக்கு தயாராக உள்ளன. மேலும், ஈரோடு ஆவின் நிறுவனத்திற்கு நடப்பு தீபாவளி பண்டிகைக்கு சிறப்பு விற்பனை செய்திட 2.09 கோடி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே அனைத்து பொதுமக்களும் தீபாவளி பண்டிகைக்கு ஆவின் பொருட்களை வாங்கி பண்டிகையை கொண்டாட மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ் வாய் வின் போது ஆவின் பொதுமேலாளர்/மாவட்ட வருவாய் அலுவலர் மு.அமிர்தலிங்கம் துணைப் பொதுமேலாளர் மரு.கா.பழனிச்சாமி மற்றும் உதவிப்பொதுமேலாளர்கள் தரக்கட்டுப்பாடு, பண்ணை மற்றும் அலுவலர்கள் உட்பட துறை சார்ந்த கலந்து கொண்டனர்.

ஓவேலி பேரூராட்சியில்

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்: உதவி இயக்குநர் ந.மணிகண்டன் தொடங்கி வைத்தார்




ஊட்டி, அக்.16-
நீலகிரி மாவட்டம், ஓவேலி பேரூராட்சிக்குட்பட்ட எல்லமலை சமுதாய கூடத்தில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமினை பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ந.மணிகண்டன் தொடங்கி வைத்தார்.

நீலகிரி மாவட்டம், ஓவேலி பேரூராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 வரையிலான வார்டுகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் எல்லமலை சமுதாய கூடத்தில் நேற்று செவ்வாய் கிழமை நடைபெற்றது.

இம்முகாமை நீலகிரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ந.மணிகண்டன், பேரூராட்சி செயல் அலுவலர் ஹரிதாஸ், தலைவர் சித்ராதேவி ஆகியோர் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். முகாமில் அரசு துறை அரங்குகள் அமைந்துள்ள இடம் தொடர்பாக அறிவிப்பினை தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டும் எனவும், பல்வேறு அரசு திட்டங்களின் சார்பாக வைக்கப்பட்டுள்ள விழிப்புணர்வு கையேடுகளை பொதுமக்களுக்கு வழங்குமாறும், முகாமில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ முகாம் தொடர்பான அறிவிப்பினை தெரிவிக்க வேண்டும்.

பொதுமக்கள் அளிக்கும் மனுக்களை பெற்று அதனை பதிவு செய்ய வேண்டும் எனவும், இம்முகாமில் வழங்கப்படும் மனுக்கள் மீது 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும் எனவும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் அவர்களிடையே தெரிவிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்பேரில் ஓவேலி பேரூராட்சிக்குட்பட்ட 15 வார்டுகளை சேர்ந்த பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு மகளிர் உரிமைத் தொகை, வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டி மனுக்களை அளித்தனர். முகாமில் 872 மனுக்கள் பெறப்பட்டன. முகாமிற்கான ஏற்பாடுகளை செயல்அலுவலர் ஹரிதாஸ், இளநிலை அலுவலர் கோட்டைசாமி மற்றும் அலுவலக பணியாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர். முகாமில் துணை வட்டாட்சியர் ரமேஷ், வார்டு உறுப்பினர் சின்னவர் உட்பட பலர் கலந்து கொண்டனர். முகாமில் பங்கேற்ற பொதுமக்களுக்கு சுகாராத்துறையின் சார்பில் ரத்த சர்க்கரை, ரத்த அழுத்தம் பரிசோதனைகள் செய்யப்பட்டன. இம்முகாமில் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டு மனுக்களை அளித்தனர். காவல்துறை சார்பில் பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

# கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் நகை மதிப்பீட்டாளர் பயிற்சிக்கு கால அவகாசம் நீட்டிப்பு - சங்க இணைப்பதிவாளர் தகவல்

ஈரோடு அக் 16-
ஈரோடு கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் நகை மதிப்பீடும் அதன் நுட்பங்களும் குறித்த பயிற்சிக்கான விண்ணப்பங்கள் 22.09.2025 முதல் கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் வழங்கப்பட்டு, பயிற்சி வகுப்பு 15.10.2025 அன்று தொடங்கப்படவுள்ளது என அறிவித்திருந்த நிலையில், தற்போது விண்ணப்பிக்க தவறியவர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் 25.10.2025 அன்று வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் நகை மதிப்பீடும் அதன் நுட்பங்களும் குறித்தான பயிற்சி வார நாட்கள் பயிற்சியாக 17 நாட்களும், வார இறுதி நாட்களான சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமை பயிற்சியாக 17 நாட்களும் அளிக்கப்பட உள்ளது. இப்பயிற்சி வரும் 25.10.2025 அன்று தொடங்கப்படவுள்ளது. இப்பயிற்சிக் காலம் 2 மாதம். இப்பயிற்சிக்கான கல்வித் தகுதி 10 ஆம் வகுப்பு (S.S.L.C) தேர்ச்சி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வயது வரம்பு குறைந்தபட்சம் 15 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். அதிகபட்ச வயதுவரம்பு இல்லை. பயிற்சிக் கட்டணம் ரூ.4,550/- செலுத்த வேண்டும். இப்பயிற்சியில் நகையின் தரம் அறியும் உபகரணங்கள் வழங்கப்படும். 40 மணி நேர வகுப்பறைப் பயிற்சியும், 60 மணி நேரம் செய்முறைப் பயிற்சியும் அளிக்கப்படும். பயிற்சி முடித்து சான்று பெற்றவர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ளலாம்.நகை மதிப்பீட்டாளர் பயிற்சி வேலைவாய்ப்பை அளிக்கக்கூடிய ஒரு பயிற்சியாகும். இப்பயிற்சிக்கு வயது வரம்பின்றி விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளிட்ட அனைத்து வங்கிகளிலும் நகை மதிப்பீட்டாளராக பணியில் சேர வாய்ப்புள்ளது. மேற்கண்ட பயிற்சியில் சேர்பவர்கள் ஈரோடு கூட்டுறவு மேலாண்மை நிலையம்,எண்.5 வாய்க்கால் மேடு, S.V.N. பள்ளி பின்புறம், கொங்கம்பாளையம் பிரிவு, சித்தோடு 638102 என்ற முகவரியிலோ அல்லது 0424-2998632 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது 9489240485 அலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம் என ஈரோடு மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் ப.கந்த ராஜா தெரிவித்துள்ளார்

கீழ்குந்தா பேரூராட்சியில்

# அ.தி.மு.க., பூத் பாக கிளை பயிற்சிகூட்டம்: மாவட்ட செயலாளர் கப்பச்சி வினோத் தலைமையில் நடந்தது



ஊட்டி, அக்.16-
நீலகிரி மாவட்டம் ஊட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அ.தி.மு.க.,கீழ்குந்தா பேரூராட்சி கழகத்தின்சார்பாக பூத் பாக கிளை பயிற்;சி கூட்டம் மஞ்சூரில் நடைபெற்றது.

பேரூராட்சிக்கழக் செயலாளர் தூனேரி எம்.சிவராஜ் ஏற்பாட்டில் நடைபெற்ற கூட்டத்தில் நீலகிரி மாவட்ட கழக செயலாளர் கப்பச்சி டி வினோத் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் கோவை புறநகர் வடக்கு ஐடி விங் மாவட்ட செயலாளர் மணிகண்டன் பூத் பாக கிளை பொறுப்பாளர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பாசறை மாவட்ட செயலாளர் அக்கீம்பாபு, மீனவர் அணி மாவட்ட செயலாளர் விஷாந்த், வர்த்தக அணி மாவட்ட செயலாளர் எப்பநாடு கண்ணன், பேரவை மாவட்ட இணைச் செயலாளர் தாம்பட்டி சிவகுமார் மாவட்ட இளைஞரணி துணைச் செயலாளர் சரவணன் மாவட்ட கலை பிரிவு துணைச் செயலாளர் பாலன், மாவட்ட விவசாய அணி இணைச்செயலாளர் கிருஷ்ணராஜ், கேத்தி பேரூராட்சி செயலாளர் ஜெய் (எ) ராதாகிருஷ்ணன், பாசறை மாவட்ட தலைவர் சுரேஷ், பாசறை மாவட்ட இணைச் செயலாளர் சாய்பரத், பேரூராட்சி அவைத் தலைவர் துரைசாமி, மாவட்ட அண்ணா தொழிற் சங்க இணைச் செயலாளர் கோபாலன், பாசறை ஒன்றிய செயலாளர் ஜெயபிரகாஷ், ஒன்றிய மாவட்ட பிரதிநிதி சுதிஷ்சுரேஷ், மற்றும் பேரூராட்சி கழகத்தின் முக்கிய நிர்வாகிகள், பூத் பாக கிளை செயலாளர்கள், கிளைச் செயலாளர்கள், மகளிர் அணியினர் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதற்கான ஏற்பாடுகளை கீழ்குந்தா பேரூராட்சி அ.தி.மு.க. செயலாளர் தூனேரி எம்.சிவராஜ் சிறப்பாக செய்திருந்தார்.

# ஊட்டி ரயில் நிலையத்தில் 117-வது மலைரயில் தினம் கேக் வெட்டி, இனிப்பு வழங்கி கொண்டாட்டம்

ஊட்டி, அக்.16-
ஊட்டி ரயில் நிலையத்தில் 117 வது மலை ரயில் தினத்தையொட்டி பாரம்பரிய ரயில் அறக்கட்டளை மற்றும் தென்னக ரயில்வே சார்பில் கேக்வெட்டி, சுற்றுலா பயணிகளுக்கு இனிப்பு வழங்கி கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

சுற்றுலாவில் முக்கிய அங்கம் வகிப்பது நீலகிரி மலை ரயில். இந்தியாவிலேயே பல் சக்கரம் கொண்ட ஒரே ரயில் பாதை, கடந்த 1898ம் ஆண்டு மேட்டுபாளையத்திலிருந்து குன்னூர் வரை நிறுவப்பட்டது. பின்னர் 1908ம் ஆண்டு ஊட்டி வரை இப்பாதை நீடிக்கப்பட்டது. நூற்றாண்டை கடந்த மலை ரயிலுக்கு கடந்த 2005ம் ஆண்டு 'யுனெஸ்கோ' நிறுவனத்தின் பாரம்பரிய அந்தஸ்து வழங்கப்பட்டது. நூறு ஆண்டுகளை கடந்து இயங்கி வரும் நீலகிரி மலை ரயில் உலக சுற்றுலா பயணிகளின் உள்ளத்தை கொள்ளை கொண்டுள்ளது.

உள்நாடு மட்டுமல்லாமல் வெளி நாடுகளில் இருந்து நீலகிரிக்கு வரும் சுற்றுலாப்பயணிகள், மேட்டுப்பாளையத்தில் இருந்து குன்னூர் வரை இயக்கப்படும் நீராவி இன்ஜின் பொருத்தப்பட்ட மலை ரயிலில் பயணிப்பதை தங்களின் முக்கியப் அங்கமாக கொண்டுள்ளனர்.

மேட்டுப்பாளையத்திலிருந்து தினமும் காலை 7.10 மணிக்கு புறப்படும் மலைரயில் முற்பகல்; 11.50 க்கு ஊட்டி வந்தடையும், பின்னர் ஊட்டியிலிருந்து மதியம் 2 மணிக்கு புறப்பட்டு மாலை 6 மணிக்கு மேட்டுப்பாளையத்தை சென்றடையும். இது போக தினமும் குன்னூரில் இருந்து ஊட்டிக்கு காலை 8 மணி, மதியம் 1 மணி மற்றும் மாலை 4.30 மணிக்கும், ஊட்டியிலிருந்து காலை 9.15, மதியம் 12.15, மாலை 5.30 மணிக்கும் இயக்கப்படுகிறது. இந்த மலை ரயிலின் 117வது பிறந்த நாள் விழா ஊட்டி ரயில் நிலையத்தில் நேற்று கொண்டாடப்பட்டது. அப்போது; நீலகிரி மலை ரயில் அறக்கட்டளை நிறுவனர் நட்ராஜ் தலைமையில் நிர்வாகிகள், மலை ரயில் ஊட்டிக்கு வந்தடைந்தவுடன் ரயில் ஓட்டுநர், சுற்றுலா பயணிகளுக்கு பூக்கள் கொடுத்து வரவேற்றனர்.

தொடர்ந்து கேக்வெட்டி சுற்றுலா பயணிகளுக்கு வழங்கப்பட்டதுடன் மலை ரயிலின் சிறப்புகளை எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் மலைரயில் ரசிகர்கள், ரயில்வே ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்துக் கொண்டனர்.

மேலூர் ஓசட்டி கிராமத்தில்

# கூட்டுறவு ஒன்றியம் சார்பில் உறுப்பினர் கல்வி திட்டம்: சரக துணைப்பதிவாளர் அய்யனார் தலைமையில் நடந்தது




ஊட்டி, அக்.16-
நீலகிரி மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பாக 15.10.2025 நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள ஆருகுச்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் செயல் எல்லையில் அமைந்துள்ள ஒசஹட்டி கிராமத்தில் உறுப்பினர் கல்வி திட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு தலைமையேற்ற உதமண்டலம் சரக துணைப் பதிவாளர் சி. அய்யனார் தனது தலைமையுரையில், இந்த உறுப்பினர் கல்வித் திட்டம் வாயிலாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க உறுப்பினர்களின் கிராமங்கள் தோறும் சென்று அவர்களது தேவைகள் மற்றும் குறைகளை கேட்டறிந்து அதனை துறை அலுவலர்கள் வாயிலாக நிவர்த்தி செய்வதே இதன் முக்கிய நோக்கம் எனவும், கூட்டுறவு சங்கத்தின் இன்றியமையாத சேவைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

திட்டவிளக்கவுரையாற்றிய நீலகிரி மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் செயலாட்சியர். ரா. கௌரிசங்கர் உறுப்பினர் கல்வித்திட்டத்திற்கான நோக்கங்கள் மற்றும் பயன்கள் குறித்தும் கூட்டுறவு இயக்க வரலாறு குறித்தும் எடுத்துரைத்தார்.

கைகாட்டி தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை மேலாண்மை இயக்குநர் திருமால்ராஜேந்திரன் சேவை நோக்குடைய கூட்டுறவு அமைப்பிற்கும் தனியார் நிறுவனங்களுக்கும் இடையேயான வேறுபாடுகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

மேல்ஒசஹட்டி தலைவர் ஆல்துரை கூட்டுறவு இயக்கம் விவசாய மக்களின் வாழ்வில் எவ்வாறு உறுதுணையாக இருக்கிறது என எடுத்துரைத்தார்.

முன்னதாக சங்கத்தின் செயலாளர் சரவணன் வரவேற்புரை வழங்க நிகழ்ச்சியின் இறுதியாக நீலகிரி மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் உதவியாளர் நவீன் நன்றியுரை கூறினார். நிகழ்ச்சியில் ஏராளமான உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

மழைநீர்
உயிர்நீர்

ஊட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில்

# 54 தூய்மை காவலர்களுக்கு தீபாவளி பரிசு தொகுப்பு: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வழங்கினார்



ஊட்டி, அக்.16-
நீலகிரி மாவட்டம் ஊட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு 268 தூய்மை காவலர்களுக்கு தீபாவளி பரிசு தொகுப்புகள் வழங்கும் அடையாளமாக நேற்று (15.10.2025) 54 தூய்மை காவலர்களுக்கு தீபாவளி பரிசு தொகுப்பு மற்றும் ஊக்கத்தொகையாக ரூ.1,000- வழங்கினார்.

நீலகிரி மாவட்டம், ஊட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில், ஊட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கடநாடு, தூனேரி, எப்பநாடு, தொட்டபெட்டா, உல்லத்தி, பாலகொலா, முள்ளிகூர், இத்தலார், நஞ்சநாடு, மேல்குந்தா, தும்மனட்டி, கக்குச்சி கூக்கல் ஆகிய 13 ஊராட்சிப்பகுதிகளில் பணிபுரிந்து வரும் 268 தூய்மை காவலர்களுக்கு தீபாவளி பரிசு தொகுப்புகள் வழங்கும் அடையாளமாக 54 தூய்மை காவலர்களுக்கு தீபாவளி பரிசு தொகுப்பாக வேட்டி, சேலை, இனிப்பு வகைகள் மற்றும் ஊக்கத்தொகையாக ரூ.1,000- வழங்கி, நலன் காக்கும் ஸ்டாலின் முகாமில் அனைவரும் கலந்து கொண்டு மருத்துவ பரிசோதனை மேற்கொண்டுள்ளீர்களா என கேட்டறிந்து, தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவித்தார்.

பின்னர் மாவட்ட கலெக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நீலகரி மாவட்டத்தின் எல்லையில் அமைந்துள்ள முதுமலை புலிகள் காப்பக பகுதிகளில் நடத்திய ஆய்வு அறிக்கையில் பன்றி காய்ச்சல் இருப்பதாக தெரிய வந்துள்ளது. உடனடியாக, கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், நீலகிரி மாவட்டத்தில் பன்றி வளர்ப்போர் மற்றும் பண்ணைகள் அமைத்து பன்றிகள் வளர்ப்போருக்கு இந்நோய் குறித்து தெரிந்து கொள்ளும் வகையிலும், எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், ஏற்கனவே அப்பகுதிகளில் கூட்டம் நடத்தப்பட்டது. இந்நோய் பன்றிகளுக்கு மட்டுமே பரவக்கூடியதால் இதர கால்நடை வளர்ப்போர் அச்சப்பட தேவையில்லை. இந்நோய் மனிதர்களுக்கு பரவகூடியது இல்லை. தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் எடுக்கப்பட்டுள்ளது எனவும், நேற்று இரவு பெய்த மழையின் காரணமாக இரண்டு இடங்களில் சிறிய அளவில் மண் சரிவு ஏற்பட்டது. இதனை உடனடியாக நெடுஞ்சாலைத் துறை அலுவலர்கள் மூலம் சீரமைக்கப்பட்டது. கோத்தகிரி பகுதியில் ஓரிரு இடங்களில் தடுப்புச்சுவர் சேதமாகியுள்ளது. தொடர்ந்து அபாயகரமான பகுதிகளில் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாவட்ட கலெக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந் நி கழ் வில் ஊட்டி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஸ்ரீதரன், அனிதா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி செயலர்கள், அலுவலக பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

